# கிண்ணியா நகர சபை

# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 06 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 01 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா நகரசபை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014ஆம் ஆண்டிற்காகப் பெறவேண்டிய முத்திரைக்கட்டணம் ரூபா.1,220,950 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014ஆம் ஆண்டிற்காகப் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,426,867 கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) பேரேட்டின் படி மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா.2,196,642 தொகையாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுகளில் ரூபா.1,923,043

தொகையாக காட்டப்பட்டதனால் அறவிடவேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா.273,599 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை வாடகைப் பணமாகிய ரூபா 2,457,554 தொகையையும் மீன்சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா 4,613,353 தொகையையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டிடம் | 40,325,057 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 4,638,775 | நிலையான சொத்துப் பதிவேடுகள், மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 14,216,506 | |
| தளபாடம் பொருத்துகள் | 4,246,857 | |
| அலுவலக உபகரணங்கள் | 3,061,520 | |
| கடன் கொடுத்தோர் | 2,398,969 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

1.3.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) | |
| (i) பிரிவு 177(2) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

(ii) பிரிவு 180(1) — ஓவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் சபையின் தவிசாளரால் விரிவான வருடாந்த நிர்வாக அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அறிக்கை மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபை நிதி ஒழுங்கு விதி

---

(i) ஒழுங்கு விதி இல. 174 — 2014ஆம் ஆண்டிற்கான அரசிறை வைப்புப் பதிவேட்டில் ஆரம்ப மீதி, பெறுவனவு, கொடுப்பனவு என்பன பூரணப்படுத்தப படவில்லை.

(ii) ஒழுங்கு விதி இல. 178 — வருட இறுதியில் விபரமான அரசிறை வைப்புக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்

---

(i) நி.பி 700 (5) — 07 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாக கேள்விச் சபை தீர்மானமும், ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்டமைக்கான கடிதங்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 702 (3) — ரூபா. 6,957,659 தொகையான 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி 571(1) — ஓவ்வொரு அரையாண்டுக்காக காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பான கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப் படவில்லை.

1.3.6 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

---

பின்வரும் சொத்துக்கள் 03 ஆண்டிலிருந்து 07 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற’கு நடவடிக்கை எடுக்கப்படாது பயனற்றுக் காணப்படுகின்றன.

| சொத்துகளின் பெயர் | பெறுமதி | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| | ரூபா. | |
| உழவு இயந்திரம் | 716,000 | 5 வருடங்கள் |
| இரண்டு சக்கர உழவு இயந்திரம் | 34,137 | 7 வருடங்கள் |
| டிப்பர் வாகனம் | 5,098,000 | 3 வருடங்கள் |
| சீமெந்து அரைக்கும் இயந்திரம் | 300,000 | 4 வருடங்கள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக நகர சபையின் செயற்பாடுகள் ரூபா.2,813,401 தொகையான செலவினங்களிற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான செயற்பாடுகள் ரூபா.20,386,740 தொகையான வருமானத்திற்கும் மிகையான செலவினத்தினை விளைந்திருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 23,200,141 தொகையான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | மதிப்பிடப்பட்ட வருமானத்தில் அறவிடப்பட்ட வருமானம் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 3,128,000 | 1,189,196 | 1,938,804 | 40 |
| குத்தகை | 10,666,750 | 8,372,290 | 2,294,460 | 56 |

#### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டில் சபையின் அதிகார எல்லைக்குள் தனியார் நிறுனங்களால் நிறுவப்பட்டிருந்த 14 விளம்பர பதாதைகளுக்கான உரிமங்களை பெறுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 குத்தகை வாடகை

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபையினால் 02 மீன் கடைகளும் 12 மாட்டிறைச்சிக் கடைகளும் நிறுவப்பட்டிருந்தன. இக்கடைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக குத்தகைக்கு வழங்காமல் அனைத்து கடைகளும் இரு நபர்களுக்கு மட்டுமே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு அனைத்து கடைகளையும் இரு நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கியதனால் பெருந்தொகையான குத்தகைப்பணம் நிலுவையாகக் காணப்படுகின்றது. அத்துடன் அனைத்துக் கடைகளையும் குத்தகைக்கு பெற்ற இருவரும் அக்கடைகளை உப குத்தகைக்கு வழங்கி பெருந்தொகைப் பணத்தை உழைப்பதற்கு சபை வழியமைத்துள்ளது. அதன் காரணமாக நகரசபை குறிப்பிடத்தக்க வருவாயை இழந்துள்ளது.

(ஆ)) 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிலுவையாக உள்ள வாராந்த சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா 232,868 தொகையையும், கோழி இறைச்சிக் கடைகளின் குத்தகைப் பணமாகிய ரூபா 32,667 தொகையையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா.2,196,642 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த 08 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக சபையின் 273 ஆம் தீர்மானத்தின் படி வருமான நிர்வாக கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை ரூபா. 48,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.6 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்தினால் 2014 திசெம்பர் 31 வரை அறவிட்ட நீதிமன்ற தண்டப்பணத்தை கணிப்பீடு செய்து மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபைகளின் அறிக்கையின் பிரகாரம் 109 களஞ்சியப் பொருட்களும், 3,905 நூலக புத்தகங்களும் குறைவாக காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கான பங்களிப்பு பணத்தை உரிய காலத்தில் அந்நிதியங்களுக்கு செலுத்தாததன் காரணமாக சபை முறையே ரூபா 135,553 மற்றும் ரூபா 26,359 தொகைகளை மீளாய்வாண்டில் தண்டப்பணமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(ஈ) பொதுநிர்வாக அமைச்சின் 09/2009 இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் சகல அலுவலகங்களிலும் நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதும் இயந்திரம் பொருத்தப் பட்டிருக்கவில்லை.

(உ) பொதுசந்தைக் கடைகளுக்கான நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தத் தவறியதனால் சபையினால் ரூபா 6,720 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்து.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

புறநெகும (நெல்சிப்) திட்டத்தின் மூலம் கட்டையாறு, மலிந்துறை வீதி கொங்ரீட் கல் பதிப்பதற்காக ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு ஒப்பந்தகாரர் உரிய காலத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமையினால் ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 579,156 பெறுமதியான செயலாற்றல் முறி உரிய காலத்தில் சபையால் காசாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா 3.75 மில்லியன் கிரயத்தில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் நிலையத்தை முறையாகச் செயல்படுத்தாத காரணத்தினால் இத்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 27% தொடக்கம் 100% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | மிகை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | -- | -- | 02 |
| உதவியாளர்கள் | 27 | 24 | -- | 03 |
| சிற்றூழியர்கள் | 80 | 69 | -- | 11 |
| தற்காலிக / நாட்கூலி ஊழியர்கள் | -- | 16 | 16 | -- |
| மொத்தம் | 109 | 109 | 16 | 16 |

செயலாளர் சேவை வகுப்பு II தரம் III, கணக்காளர் சேவை வகுப்பு II தரம் III என்பவற்றிற்கான பதவிகள் கடந்த ஐந்து வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு